# ஈழத்துப் புலவர் வரலாற்று எழுதுகையும் ஈழத்து இலக்கிய வரலாற்று உருவாக்கமும்

(சி.கணேசையரின் ஈழநாட்டு தமிழ்ப் புலவர் சரிதத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு)

**ஹரோசனா ஜெயசீலன்,**
தற்காலிக உதவி விரிவுரையாளர், சபரகமுவப் பல்கலைக்கழகம்.
harosana87@gmail.com

இலக்கிய வரலாறு என்கின்ற கருத்தமைவில் இலக்கியமுமுண்டு வரலாறுமுண்டு. இலக்கியம் வரலாற்றை அறிவதற்கு உறுதுணையாவதுடன் வரலாறு இலக்கிய வளர்ச்சியை மதிப்பிடுவதற்கும் துணை நிற்கின்றது. ஒரு சமூகம் நிலைபேறுடைய சமூகமாக இயங்குவதற்கும் அச்சமூகத்தின் மதிப்புக்களையும் பாரம்பரியங்களையும் கட்டியெழுப்புவதற்கும் முன்னைய தலைமுறையின் வாழ்க்கை முறைகளைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கும் இலக்கிய வரலாறு மிக முக்கியமானதாகும். இலக்கியவரலாறு என்பது இலக்கியத்தின் வரலாற்று வளர்ச்சி பற்றிய பயில்துறையாகும். இது இலக்கிய வகைமைகள் தொடர்பாக இலக்கிய நுட்பங்களை உருவாக்குகின்ற அதேவேளை வெறுமனே கடந்த காலத்தை மட்டும் புரிந்து கொள்வதற்கு உதவுவது அல்ல, இலக்கிய வரலாறு குறிப்பிட்ட சமூகத்தின் கலாசார பாரம்பரியங்களின் களஞ்சியமாகவும் திகழ்கின்றது. சமூக மற்றும் இலக்கிய வளர்ச்சியை இலக்கிய வரலாற்றின் வழி ஒருங்கிணைக்கவும் முடிகின்றது. "சமூகத்தின் நடைமுறைகளுள் ஒன்று என்ற வகையில் தமிழிலக்கியத்தின் வளர்ச்சியை நோக்குவது முக்கியமான அறிவுநிலைப்பட்ட தேவையாயுள்ளது. இந்நிலைநின்று ஆராயப்படும் பொழுதுதான் இலக்கியத்திடம் வேண்டப்படும் சமூக - அழகியல் அம்சங்கள், இலக்கியப் பயில்வாளனின் சமூக நிலைமை, சமூகத்தின் பொதுவான உற்பத்தி முறைகளுக்கும் இந்த இலக்கிய உற்பத்தியாளருக்குமுள்ள உறவுகள், இலக்கியத்தின் கருத்துநிலைப் பங்கு ஆகியன தெளிவாகும். இவ்வாறு நோக்கத் தொடங்குவதன் மூலம் தமிழ் மக்களின் வரலாற்றை அவர்தம் இலக்கியங்களின் மூலம் அவ் இலக்கியங்களின் நிலை நின்று விளங்கிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொள்ளலாம்" (சிவத்தம்பி, 2000 :8).

இலக்கிய வரலாறு என்பது இலக்கிய ஆராய்ச்சியின் ஒரு வகையேயாகும். ஆய்வு என்பது மாறிலியாக இருக்கின்ற அதேவேளை காலம் இடம் என்னும் இரண்டு அடிப்படைகள் இலக்கிய ஆய்வுகளின் முறையியல்களைத் தீர்மானிக்கின்றன. சமுதாயம் கால மாற்றத்திற்கேற்ற மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு மாறியும் வளர்ந்தும் வரும் போது ஆய்வின் பண்புகளிலும் மாற்றம் ஏற்படுகின்றது. சிந்தனை விருத்தி, அறிவியல் விருத்தி, கலை இலக்கிய வடிவங்களின் தோற்றத்தில் ஏற்பட்ட மாற்றம் என்பன இலக்கிய ஆராய்ச்சியிலும் பாதிப்பை ஏற்படுகின்றன. அதனடிப்படையில் சில ஆய்வு முறைகள் முற்றிலும் வழக்கிறக்கின்றன, அதாவது கைவிடப்படுகின்றன. புதிய இலக்கிய ஆய்வுகளும் முறைகளும் தோன்றுகின்றன. சில இலக்கிய ஆய்வுகள் தம் தன்மையில் மாற்றம் அடைகின்றன. தமிழாராய்ச்சி என்பது ஆரம்பத்தில் நூற் தொகுப்புச் சிந்தனையாகவும், உரைப்பாரம்பரியமாகவும், ஐதீகங்களைப் புனைந்துரைப்பதாகவும் நிலவியது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்ற நிலையில் இவையெல்லாம் அவ்வக்கால சமுதாய நடைமுறைக்கேற்ப ஆராய்ச்சிகளாகவே வெளிவந்தன. தமிழிலக்கிய ஆய்வுப் பரப்பில் ஆரம்பத்திலிருந்த அறவியல், அவயவி. ரசனை முதலானவையும் காலமாற்றத்திற்கேற்ப செல்வாக்கிழந்து போய்க் கொண்டிருக்க, சூழலியல், பின் நவீனத்துவம் எனப் புதிய புதிய ஆய்வுக் கோட்பாடுகளும் முறைகளும் தோன்றியவண்ணமிருகின்றன.

தமிழ்ச் சூழலில் இலக்கிய வரலாறு எழுதும் முறை ஆங்கில மொழித் தொடர்பினால் வந்திணைந்தது. "ஆங்கில மொழி வாயிலாக நம்மை வந்தடைந்த மேனாட்டுச் சிந்தனை மரபு, கல்வி மரபுகள் என்பன நாம் நமது மொழியைக் கற்கும் முறையில் அதாவது நமது மொழியை நோக்கும் அறியும் அணுகும் முறையில் புதிய நெறிமுறைகளை அறிமுகம் செய்து வைத்துள்ளன. இலக்கிய வரலாறு என்னும் பயில்துறை அத்தகைய புதிய பயில் துறைகளுள் ஒன்றாகும்" (மேலது: 20). 'ஆங்கில மொழி வாயிலாக நம்மை வந்தடைந்த முதலாளித்துவப்

பொருளாதார நடைமுறையின் வெளிப்பாடுகளும் அதன் விளைவாக உருவான நவீனமயமாதலும் எமது மொழி பற்றிய புதிய பார்வைகள் ஏற்படக்காரணமாயின. ஆங்கில மொழி தந்த அறிவியல் மனப்பாங்கு தமிழ்மொழியை ஆராய்வதில் அதுகாலவரை நிலவி வந்த மரபார்ந்த நடைமுறைகளை உடைத்து விஞ்ஞான முறை சார்ந்த புதிய மொழிவுகளை முதன்மைப்படுத்தின. அச்சியந்திரத்தின் அறிமுகம், அதனால் ஏற்பட்ட நூற் பெருக்கம், அதன் வழி உருவான வரலாற்றுணர்வு, நவீன சுய பிரக்ஞையின் விழிப்புணர்வு, கால நிர்ணயம் செய்தல், பொது மக்கள் பற்றிய பிரக்ஞை, தேசாபிமானம், பிறமொழிக்குழுக்களிடையே தன் தனித்துவத்தை நிலைநாட்டல் (மேற்கோள் வ. மகேஸ்வரன், 2015) முதலானவற்றைத் தமிழில் இலக்கிய வரலாறு எழுதுகைக்கான காரணிகளாகக் குறிப்பிடலாம். இது இலக்கியம் பற்றிய அணுகுமுறைகளில் புதிய பார்வைகளைத் தோற்றிவித்தது.

ஆராய்ச்சித் தன்மை முதன்மை பெறாவிட்டாலும் இலக்கிய வரலாறு பற்றிய உணர்வு தொடக்க காலம் முதலே தமிழ் சமுதாயத்தில் காணப்பட்டிருக்கின்றது என்பதனை சங்க இலக்கியத் தொகுப்பு உள்ளிட்ட தொகுப்பு நூல்களின் வழியும் பெருவளர்ச்சி பெற்றிருந்த உரைப்பாரம்பரியத்தின் மூலமும், சங்கம் என்னும் ஐதீகத்தைப் புனைந்துரைத்து பாகுபடுத்திய இறையனார் களவியலுரை வாயிலாகவும் காணக்கூடியதாக உள்ளது. (விரிவுக்கு : சிவத்தம்பி) பதினெண் மேற்கணக்கு, பதினெண் கீழ்க்கணக்கு, பன்னிரு திருமுறைகள், சைவ சித்தாந்த நூல்கள் எனத் தொகுப்பு நூல்களின் வழியும் உரைப்பாரம்பரியம் வழியும் வெளிப்படும் இலக்கிய வரலாறு பற்றிய உணர்வு காலப்போக்கில் புலவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளைத் தொகுத்து எழுதும் மரபாக வளர்ச்சியடைந்து பின்னர் தனித்த இலக்கிய வரலாறுகளாகப் பரிணமித்துள்ளன. அந்தவகையில் இவ்வாய்வானது, ஈழத்து இலக்கிய வரலாற்று உருவாக்கத்தில் ஈழத்துப் புலவர் வரலாற்று எழுதுகைகளின் வகிபங்கினைச் சி.கணேசையரின் ஈழநாட்டு தமிழ்ப் புலவர் சரிதத்தை அடிப்படையாகக் கொண்டு, சமூகவியல் மற்றும் விபரண அணுகுமுறைகளின் வழி ஆய்வு செய்வதாக அமைந்துள்ளது.

தமிழில் இலக்கிய வரலாறு எழுதப்பட்ட முறைகளாகப் பின்வருவனவற்றை வ. மகேஸ்வரன் குறிப்பிடுவார்.

- பொதுவான கருத்துக்களைக் கட்டமைத்து வரலாறு எழுதுதல்
- இலக்கிய வரிசை அல்லது புலவர் வரிசை என்ற வகையில் சரிதங்களை எழுதுதல்
- வரலாற்றையும் அதன் வழி எழுந்த இலக்கியத்தையும் பொருத்திப் பார்த்தல்
- பல்துறை ஆய்வுச் சங்கம ஒழுங்கில் இலக்கியத்தை அதன் வரலாற்றுத் தடயங்களுடன் நோக்குதல் (மகேஸ்வரன், 2015 : 5)

எனினும் இவற்றை வரலாற்று வளர்ச்சியின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்திக் கொள்ள முடியும்.

- இலக்கிய இரசனை, இலக்கியத்தை நயத்தல் என்கின்ற அடிப்படைகளில் வரலாற்றினை எழுதியமை. இவை பெரும்பாலும் இலக்கியப் பாடங்களை மனனம் செய்வதாகவும் அவற்றின் பொருளை விளக்குவதாகவும், இலக்கியத்தை நயந்துரைப்பதாகவும் அமைந்தன.

- புலவர் வரிசை, புலவர் சரித்திரங்களை எழுதுகின்ற முறைமை : தனித்தனிப் புலவர்கள் பற்றிய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களையும் அவர்கள் இலக்கியத்திற்கு ஆற்றிய பங்களிப்புக்களையும் எடுத்துக்கூறுவதாக இவை அமைந்திருந்தன

- பொதுக் கருத்துக்களின் அடிப்படையிலும் விவரணமுறையில் விளக்குவதாகவும் இலக்கிய வரலாற்றை எழுதுதல்

- இலக்கியப்பண்புகளின் அடிப்படையில் தொகுத்துப் பொதுமைப்படுத்தி வரலாற்றுக் கால கட்டங்களின் அடிப்படையில் இலக்கிய வரலாற்றை எழுதுதல். கால அடிப்படையிலோ இக்காலத்தில் நிலவிய அரசியல், சமூக பொருளாதார அடிப்படைகளிலோ பெரும் பிரிவுகளாக வகுத்து விளக்குவது.

- இலக்கிய வகைமை அடிப்படைகளில் இலக்கிய வரலாற்றை எழுதுதல். காவிய வரலாறு, நாவல் வரலாறு, சிறுகதை வரலாறு என இலக்கியப் பிரிவுகளின் அடிப்படையில் ஆராய்வது.

- நவீன கோட்பாட்டு அடிப்படையிலும் ஆய்வியல் முறைகளின் அடிப்படையிலும் இலக்கிய வரலாற்றை எழுதுகின்ற முறைமை

மேற்கூறிய இலக்கிய வரலாற்று அணுகுமுறைகள் யாவற்றுக்கும் ஈழத்து அறிஞரின் பங்களிப்பு மிக முக்கியமானது. ஈழத்தறிஞர் தமிழ் இலக்கிய வரலாறுகளுக்கு அடித்தளமிட்டுக் கொடுத்தவர்களாக இருந்த போதும், தமிழகத்தைப் பின்பற்றியவர்களாக இருந்துள்ளார்களேயொழிய, ஆரம்பத்தில் தமது சுய வரலாறு குறித்த பிரக்ஞை பெரும்பாலும் அவர்களிடத்தில் காணப்படவில்லை என்றே கூறமுடியும். இதனைப் பேராசிரியர் க. அருணாசலம் பின்வருமாறு குறிப்பிடுவார்.

> "கிறிஸ்தாப்த காலந்தொட்டு இன்றுவரை தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்கு இலங்கை தனது பங்களிப்பைச் செய்து வந்துள்ளதை அவதானிக்கலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை இலங்கைத் தமிழ்மொழி இலக்கிய, பண்பாட்டு வளர்ச்சியானது பெருமளவுக்குத் தமிழகத்தைப் பின்பற்றியதாகவே காணப்பட்டது" (அருணாசலம், 1997 : 2).

தமிழக வரலாற்றைத் தம்முடைய வரலாறாக வரித்துக்கொண்டமை, தமிழகத்தின் ஒரு கூறாக ஈழத்தைக் கொண்டமை முதலானவற்றை இதற்கான காரணங்களாகக் குறிப்பிடலாம். எனினும் 1930 களுக்குப் பிறகு இந்நிலையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. தமிழ் இலக்கிய வரலாற்றில் பிராந்திய இலக்கியங்கள் மறைந்து போகாதபடி பிராந்திய இலக்கியம் பற்றிய அக்கறை வலுப்பெற்றது. அவை ஈழத்துத் தமிழ் இலக்கியமாகவும், மலேசியத் தமிழ் இலக்கியமாகவும், சிங்கப்பூர் தமிழ் இலக்கியமாகவும் பல் பரிணாமங்களை எடுத்தன. அதுவரை நிலவி வந்த 'இலங்கையில் தமிழ் இலக்கியம்' பற்றிய கருத்து நிலை 'இலங்கைத் தமிழ் இலக்கியமாக' மாற்றம் பெற்றது.

இதன் முதல்நிலை வளர்ச்சியாக அமைந்தது புலவர் வரலாற்று எழுதுகைகளாகும். அந்தவகையில், புலவர் வரலாறு என்பது பல்வேறு வரலாற்றுக் காலகட்டங்களிலும் வாழ்ந்த தனித்தனி மனிதர்களின் சமூக வெளிப்பாடுகள் பற்றிய ஒரு மதிப்பீடாகும். சமூகம் பல்வேறு தனிநபர்கானது என்ற வகையில் சமூகத்தின் வரலாறு என்பதும் பல்வேறு தனிமனிதர்களால் உருவாக்கப்படுகின்ற ஒரு கூட்டுசெயற்பாடு ஆகும். எனினும் இங்கு தனி மனிதர்களின் சிந்தனை என்பது அவர்களது தனிப்பட்ட சிந்தனை மட்டுமன்று, அது அவர்கள் வாழ்கின்ற சமூகத்தின் சிந்தனையுமாகும்."வரலாற்றின் நிகழ்வுகள் தனிநபர்களின் சித்தத்திலிருந்து வரும் முடிவுகளால் தொடக்கப்படுகின்றன. இருந்தாலும் தனிநபர் சித்தம் என்பது அத்தனிநபர்கள் செயற்படும் வரலாற்று நிலைமைகளால் உருவாக்கப்படுவது தான். அவர்கள் எதை முடிவு செய்கின்றார்கள் என்பதை இந்த வரலாற்று நிலைமைகள் தீர்மானித்து விடுகின்றன" (றிச்சார்ட் ஜே. இவன்ஸ், 2011: 49)

ஈழத்து இலக்கிய வரலாற்றினைக் கட்டமைத்ததில் புலவர் வரிசைகளுக்கு முக்கிய பங்கு உண்டு. இலக்கிய வரலாற்றைக் கால அடிப்படையில் வகுப்பதற்கு முன் உலகளாவிய ரீதியில், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்த வரலாற்று எழுது முறையாக புலவர் சரித்திரங்களை எழுதுகின்ற முறையே விளங்கியது. இச்சரிதங்கள் அனைத்தும் இலக்கிய, இலக்கணங்களைப் படைத்த புலவர் பட்டியலை தந்து அவர்களது இலக்கிய, இலக்கணப் பணிகளை குறிப்பிடுவதனூடாக இலக்கிய வரலாற்றை கட்டமைக்கின்றன. ஈழத்துத் தமிழறிஞர்களுள் சைமன் காசிச் செட்டி, ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, சி. கணேசையர், தென் புலோலி கணபதிப்பிள்ளை, சு.வித்தியானந்தன் எனப் பலர் புலவர் வரிசை என்கின்ற அடிப்படையில் வரலாறுகளை கட்டமைத்துள்ளனர். இவை தனியே ஈழநாட்டுப் புலவர் வரலாற்றையும், ஒருங்கே, தமிழக மற்றும் ஈழப் புலவர் வரலாற்றையும் ஆய்வு செய்து விளக்குவனவாக அமைந்துள்ளன.

'வாழ்க்கை வரலாற்றுத் தகவல்கள் தனிநபர் சார்ந்ததாகவோ அன்றி குடும்ப வரலாறாகவோ அமையலாம். இதுதவிர தனிநபர் ஒருவரை மையப்படுத்திய விரிவான ஆவணவாக்கமாகவோ அல்லது பல நபர்களை உள்ளடக்கிய தொகுப்பாக்கமாகவோ இருக்கலாம். தமிழ் இலக்கியத் துறையில் தமிழ்ப்புலவர் பலருடைய வாழ்க்கை வரலாறுகளை ஒரே நூலில் உள்ளடக்கி வெளியிடப்பட்ட முதல் நூல் என்ற பெருமையைப் பெறும் சைமன் காசிச்செட்டி அவர்களின் தமிழ் புளுட்டாக்(1859) என்னும் தமிழ்ப்புலவர் சரிதம்' ஆகும். நூல் உருவாக்கத்திற்கான தகவல் சேகரிப்பானது ஒரு தசாப்பதங்களுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்டது என்பதை 1840ம் ஆண்டு தொடக்கம் வெளிவந்த சிலோன் மகசின் என்ற சஞ்சிகையில் சைமன் காசிச் செட்டி அவர்களால் எழுதப்பட்ட முப்பத்திரண்டு அறிஞர்களின் செய்திகள் சான்றாக உள்ளன'(ஸ்ரீ காந்தலட்சுமி, 2014). ஆங்கிலத்தில் வெளிவந்த இந் நூலிலுள்ள 197 புலவர்களின் பன்னிரண்டு புலவர்கள் ஈழநாட்டைச் சேர்ந்த புலவர்களாக விளங்குகின்றனர். அவர்கள் அரசகேசரி, கணபதிஐயர், கூழங்கையர், ஞானப்பிரகாசதேசிகர், குமாரசிங்க முதலியார், லோரஞ்சுப் புலவர், சரவணமுத்து, சேனாதிராயர், சின்னத்தம்பிப் புலவர், வரகவிராயர், விஸ்வநாத சாஸ்திரியார், பிலிப்பு த. மெல்லோ முதலானோராவார்.

சைமன் காசிச் செட்டியின் ஆங்கில நூலை அடுத்து ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளையால் எழுதப்பட்ட பாவலர் சரித்திர தீபகம் தமிழில் வெளிவந்த புலவர் வரிசைகளுள் மிக முக்கியமான ஒரு நூலாகும். தமிழில் வந்த முதலாவது புலவர் வாழ்க்கை வரலாற்று என்கின்ற சிறப்புப் பெறுவதும் இந்நூலேயாகும். இது தமிழக மற்றும் ஈழத்துப் புலவர்கள் பற்றிய ஆய்வாக விளங்குகின்றது. தமிழகப் புலவர்களுக்கு ஈடாக ஈழத்துப் புலவர்கள் நூலில் இடம்பெறுகின்றனர். பாவலர் சரித்திர தீபகத்தில் இடம்பெறும் 410 புலவர்களுள் 81 பேர் ஈழத்தைச் சேர்ந்தவர்களாவர். அவர்களுள் 69 பேர் சைமன் காசிச்செட்டியின் தமிழ் புளுட்டாக்கில் குறிப்பிடப்படாத புதிய புலவர்களாவர். புலவர்களது வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம், அவர்களின் இலக்கியப்பணிகள், இலக்கியப் பகுதிகளின் மேற்கோள்கள் என்பவற்றைத் தொகுத்துத் தருவதாக நூல் அமைந்துள்ளது. ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் முதல் 19 ஆம் நூற்றாண்டு வரையான ஈழத்துத் தமிழ்ப் புலவர்கள், அவர்களது இலக்கிய, இலக்கண, நாடகப் படைப்புக்கள் என்பன பாவலர் சரித்திர தீபகத்தில் இடம்பெறுகின்றன. பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் காட்டும் பல உதாரணப் பாடல்கள் அந்நூல்களின் உள்ளடக்கம் பற்றி அறிந்து கொள்வதற்கு உதவுகின்றன.

ஈழநாட்டைச் சேர்ந்த புலவர்களான சைமன் காசிச் செட்டி, ஆர்னல்ட் சதாசிம்பிள்ளை, சுன்னாகம் குமாரசாமிப் புலவர் ஆகியோரால் எழுதப்பட்ட புலவர் வரிசை நூல்கள் ஈழத்துப் புலவர்களால் ஆக்கப்பட்டவை என்ற வகையில் ஈழத்துப் புலவர்களில் சிலர் மேற்கூறிய புலவர் சரிதங்களில் உள்வாங்கப்பட்டுள்ளனரேயொழிய இவை ஈழத்து இலக்கிய வரலாற்றுக்கான முற்று முழுதான ஒரு தனித்த ஆவணமாக அமையவில்லை. இந்தவகையில், சி. கணேசையரின் ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரமே ஈழத்துப் புலவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றித் தனித்து வெளிவந்த காத்திரமான முதல் நூல் ஆகும்.

“இலக்கிய வரலாறு என்பது றால்∴ப் கொஹென் என்பாரது கூற்றுப்படி, கால வரன்முறையில் வரிசைப்படுத்தப்பட்ட ஆக்கங்களை வரலாற்று நடைமுறையின் முழுமைக்கு அத்தியாவசியமான அம்சங்களாகக் கொள்ளும் பயில்துறையாகும்” (மேற்கோள்: சிவத்தம்பி, 2000: 34). எனவே இலக்கிய வரலாற்றின் கால வரன்முறைப்படுத்தல் பண்பு என்பது மிக முக்கியமானது. இதனைக் கணேசையரிடத்தில் காணக்கூடியதாக உள்ளது. முன்னையபுலவர் வரலாற்றாசிரியர்களைப் போல் அகர வரிசை என்கின்ற முறையிலிருந்து மாறுபட்டு, வரலாற்றுக் கால ஒழுங்கில் ஈழத்துப் பூதந்தேவனார் தொடக்கம் ஆங்கிலேயர் காலம் வரையான ஈழத்துத் தமிழ் புலவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம் ஆராய்ந்துள்ளது. முதன் முதலாக 101 ஈழத்துத் தமிழ்ப் புலவர்கள் இந்நூலில் இடம்பெறுகின்றனர். நூலின் அமைப்பு முறை ஈழத்து பூதந்தேவனார் என ஆரம்பித்து, ஆரியச் சக்கரவர்த்திகள், அரசரல்லாத புலவர்கள், அனுபந்தம் என்கின்ற முறையைக் கொண்டதாக அமைந்திருக்கின்றது. இந்நூலின் கால வரிசைப்படுத்தலையும் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டவை தொடர்பாகவும் சி.கணேசையர் பின்வருமாறு குறிப்பிடுவார்.

> “இந்நூலின் கண் வரும் புலவர்களின் சரித வைப்பு முறை அவர்களது இறந்த காலத்தின் முறையே முறையாகப் பெரிதும் கொண்டு வைக்கப்பட்டுள்ளது. மறந்து விடப்பட்ட புலவர்கள் சிலர் சரிதங்களையும், பலர்க்குத் தெரியாது மறைந்து போன புலவர்கள் சிலர் சரிதங்களையும், இயற்கையில் கவி பாடும் திறமை மாத்திரம் அமைந்த புலவர்கள் சிலர் சரிதங்களையும் அநுபந்தமாகச் சேர்த்துக் கூறியுள்ளோம்” (கணேசையர், 1939 : II) என்பார்.

இவற்றின்படி ஆசிரியர் இலக்கிய வரலாற்றுணர்வு கொண்டவராக இருந்திருக்கின்றார் எனத் துணியலாம். ஈழத்துப் பூதந்தேவனார், ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் எனக் கால வரிசைப்படுத்தும் உணர்வு கணேசையரிடம் காணப்பட்டுள்ளதுடன், ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தை அரசர், மற்றும் அரசர் அல்லாத புலவர்கள் எனவும் பாகுபடுத்தியிருப்பார்.

நூலின் அமைப்பு முறையில் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டவை எவை எனின் மறந்து விடப்பட்ட புலவர்கள் சரிதங்களாகவும், பலர்க்குத் தெரியாது மறைந்து போன புலவர்கள் சிலர் சரிதங்களாகவும், முறைப்படியான கல்வி மூலம் கவிபாடும் திறமையற்றவர்களன்றி இயற்கையில் கவி பாடும் திறமை மாத்திரம் அமைந்த புலவர்கள் சிலர் சரிதங்களாகவும் காணப்படுகின்றன. இவை நூலில் அரசர் அரசரல்லாத புலவர் காலத்துக்கு முற்பட்ட பல புலவர்களின் பெயர்களையும் கொண்டடைந்துள்ளன. எனவே காலவரன்முறைப்படுத்துகின்ற சி.கணேசையரின் நோக்கில் ஏற்பட்ட முரணுக்கான காரணத்தைக் க. ரகுவரன் பின்வருமாறு கூறியிருப்பார்.

“ஈழநாடும் தமிழும் என்கின்ற தலைப்பில் கணேசையரால் எழுதப்பட்டு வித்தகம் பத்திரிகையில் வெளிவந்து கொண்டிருந்த தொடர், பத்திரிகையின் இடை நிறுத்தத்தால் நின்று விட்டது. அந்நிலையில் ஈழகேசரிப் பத்திராபதி நா.பொன்னையாப்பிள்ளை கேட்டுக்கொண்டதற்கிணங்க, கணேசையர் அதனை ஒருவாறு முற்றுவித்து வெளியிடக் கொடுத்தமையின் விளைவே இந்நூல். வெளியீட்டாளரின் அவசரமும் நூலுட் புலப்படவே செய்கின்றது. நூல் அச்சிலிருக்கும் நிலையிலே புலவர் சிலரது சரித்திரங்களைக் கணேசையர் எழுத வேண்டியேற்பட்டது போலும் . அதனால் அப்புலவர் சரித்திரங்களை ‘அவர்களது இறந்த காலத்தின் முறையே முறையாகப் பெரிதும் கொண்டு வைக்கும்’ கணேசையருடைய திட்டத்துக்கு ஊறு நேரலாயிற்று. அதனால் அவ்வகையிலான சரிதங்களை நூலிறுதியில் அனுபந்தமாக அமைக்க நேரிட்டது” (ரகுவரன்,2006: XII)

இதனை உறுதிப்படுத்தும் வகையில் கணேசையர் முன்னுரையில், இச்சரிதத்தை ஐந்து வருடங்களுக்கு முன்னேயே எழுதத் தொடங்கியதாகவும், ‘ஈழநாடும் தமிழும்’ என்ற தலைப்பில் வித்தகம் பத்திரிகையில் ஒவ்வொரு சரிதமாக எழுதியதாகவும், வித்தகம் பத்திரிகை

இடைநிறுத்தப்பட்டதால் அம்முயற்சி கைவிடப்பட்டதாகவும், பின்னர் ஈழகேசரி அதிபரின் வேண்டுகோளின் படி அம்முயற்சியை மீண்டும் தொடர்ந்தாகவும் கூறியிருப்பார்.

இலக்கண ஆசிரியர், உரையாசிரியர், ஆய்வாளர் எனப் பல்வகை ஆளுமை கொண்ட சி. கணேசையரின் ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம் அவரை ஈழத்து இலக்கிய வரலாற்று ஆசிரியர்களில் முக்கியமான ஒருவராக இனங்காட்டுகின்றது. சி. கணேசையரின் ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரத்தில் இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் வாழ்ந்த புலவர்களின் பெயர்கள் இடம்பெறுகின்றன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புலவர்கள் அதிகமாகவும், திருகோணமலை, மட்டக்களப்பு, வன்னி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த புலவர்கள் சிறுபான்மையும் இடம்பெற்றுள்ளனர். சைவ சமயத்தைச் சேர்ந்தோர் மட்டுமல்லாது கிறிஸ்தவப் புலவர்களும் நூலில் இடம்பெறுகின்றனர். இந்த வகையில் சி. கணேசையர் தனது சரித்திரத்தில் நடுநிலைத் தன்மை ஒன்றை கடைப்பிடிக்க முனைவதைக் காணலாம்.

இவர் பற்றிப் பேராசிரியர் சிவலிங்கராஜா குறிப்பிடும் கருத்தும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

> “இலக்கிய வரலாற்றாய்வாளன் ஒருவன் கையாளும் மொழியியல் நோக்கை. ஐயர் நன்கு அறிந்திருந்தார் என்று எண்ணமுடிகிறது. கணேசையரின் பணிகளிற் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் இவ்வீழநாட்டுத் தமிழ்ப் புலவர்கள் பற்றிய வரலாற்று நூலுக்கு உண்டு. பலவகையான தகவல்களையும் சேகரித்து அதிலே தான் உண்மையெனக் கண்டவற்றையே இந்நூலிற் சேர்ந்திருப்பதாகத் தெரிவிக்கிறார், தகவல்கள் பெறுவதிலேற்பட்ட இடர்ப்பாட்டையும் நம்பகமற்ற செய்திகள் நிலவுவதையும் அனுபவாயிலாகக் கண்டு முகவுரையிலே குறித்திருக்கிறார். ஈழநாட்டின் பெருமையையும் தனித்துவத்தையும் வெளியுலகுக்குக் காட்டவேண்டிய அத்தியாவசிய தேவை நாவலர் காலத்திலேயே ஆரம்பித்துவிட்டது. இத்தேவையின் முதற்குரல் நல்லறிவுச் சுடர் கொளுத்தலாக ஒலித்தது. தொடர்ந்து ஈழநாட்டையும் குறிப்பாக யாழ்ப்பாணத்தையும் அயலவர்கள் அறிந்துகொள்ளும் வகையிலே பல நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்துகொண்டிருந்தன. ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதத்தின் வருகைக்கு இதுவுமொரு காரணமாகலாம்” (சிவலிங்கராஜா, 1989 :86)

ஈழத்து இலக்கிய வரலாற்றைச் சங்க காலத்திலிருந்து ஆரம்பிக்கின்ற இவர் சங்கப் பாடல்களில் இருக்கின்ற இலங்கை பற்றிய செய்திகளை தக்க மேற்கோள்களுடன் எடுத்துக்காட்டுவதன் மூலம் ஈழத்தின், ஈழத்து இலக்கிய வரலாற்றின் தொன்மையை நிரூபிக்க முயல்கின்றார். குறிப்பாக, சிறுபாணாற்றுப்படையில் இடம்பெறும், தொன்மாவிலங்கைக் கருவோடு பெயரிய நன்மாவிலங்கை என்னும் அடிகளையும், மணிமேகலையில் இடம்பெறும் லங்காதீவகத்துச் சமனொளி என்னும் அடிகளையும், தொல்காப்பிய உரையில் இராவணன் பற்றிக் கூறப்படும் ஐதீகத்தையும் எடுத்துக்காட்டுவார். ஈழத்துப் பூதந்தேவனாரை ஈழத்தின் முதற் புலவராக அடையாளப்படுத்தும் முதல் முயற்சியை இவரது ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரத்திலே கண்டுகொள்ளலாம். சங்க இலக்கியங்களுடனும் ஈழத்துப் பூதந்தேவனாருடனும் ஈழத்து இலக்கிய வரலாற்றை ஆரம்பிக்கின்ற மரபுக்கு முதன் முதலாக வழிகோலியவராகவும் கணேசையரைக் குறிப்பிடலாம். ஈழத்துப் பூதந்தேவனார் பற்றி இவர் குறிப்பிடும் போது,

> “இவர் மதுரை ஈழத்துப் பூதந்தேனார் எனவும் படுவர். இவர் மதுரையில் வந்து தங்கிய ஈழத்துப் பூதனது மகன் தேவன் எனப்படுவார். இவர் நாடு ஈழநாடு எனப்படினும் அந்நாட்டில் எவ்வூர் என்பது தெரிந்திலது. இவர் ஏதோ காரணமாக இந்நாட்டை விட்டு மதுரையில் இருந்தவராகத் தெரிகிறது. மதுரையிலேயே இவர் பிறந்து படித்து சங்கத்திலொருவராகச் சேர்ந்தாரெனக் கருதுதற்குமிடமுண்டு. அவர் பாலையையும் குறிஞ்சியையும் பாடியுள்ளார்” (கணேசையர், 1939: 2)

என்பார். இவற்றின் மூலம் சங்க இலக்கியங்களில் இடம்பெறுகின்ற மதுரை ஈழத்துப் பூதந்தேவனாரும், ஈழத்துப் பூதந்தேவனாரும் ஒருவரே என்னும் நோக்குக் கொண்டவராக கணேசையர் விளங்கியிருக்கின்றார எனலாம். ஈழத்திலிருந்து வந்து தங்கிய பூதன் என்பவனது மகன் தேவன் எனப் பூதந்தேவனாரைக் கருத இடமுண்டு என்கின்ற கருத்துடையவராகவும்

காணப்பட்டுள்ளார். பூதந்தேவனாரது பாடல்கள் குறிஞ்சியையும், பாலையையும் பாடும் பாடல்களாகக் காணப்படுகின்றன என்கின்ற தகவலை முன்வைப்பதன் மூலம் ஆய்வு தொடர்ந்து வளர்ந்து செல்வதற்கும் வழிகாட்டியிருப்பார்.

இதனை பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை பின்வரும் கருத்துக்களை முன்வைத்திருப்பதனூடாக நிறுவியிருப்பார்.

- ஈழத்து பூதந்தேவனார் என்கின்ற பெயரில் இரண்டு பெயர்க் கூறுகள் காணப்படுகின்றன.
- பூதன் என்கின்ற பெயர் ஈழத்துக்குரியது.
- ஈழத்துப் பூதந்தேவனாரும் மதுரை ஈழத்துப் பூதந்தேவனாரும் ஒருவரே
- குறிஞ்சியையும் பாலையையும் பாடும் அவரது பண்பு அவர் வாழ்ந்த இடங்களின் தாக்கத்தினால் இருக்கக் கூடும். (வேலுப்பிள்ளை, 2009)

இவ்வாறு பின்னைய ஈழத்து இலக்கிய வரலாற்றாசிரியர்கள் ஆய்வு செய்வதற்கு கணேசையரின் புலவர் சரித்திரத்தில் கூறப்பட்ட மேல் கூறிய பல கூற்றுக்களே காரணமாயுள்ளன எனலாம். முரஞ்சியூர் முடிநாகராயர் ஈழத்தவரோ என்று இன்று வரை நிலவி வருகின்ற சந்தேகத்தையும் நூலில் சுட்டிக்காட்டியிருப்பார். இதன் மூலம் ஈழத்து இலக்கியம், ஈழத்து இலக்கிய கர்த்தாக்கள் தொடர்பான பிரக்ஞை உடையவராகக் கணேசையர் காணப்பட்டுள்ளார் எனலாம். இவ்வாறு, ஈழத்து இலக்கிய வரலாற்று ஆசிரியர்களுக்கான முன்னோடியாகவும், ஈழத்து இலக்கிய வரலாற்று எழுதுகைக்கான வாயிலைத் திறந்து விடுகின்றவராகவும் திகழ்கின்றார்.
ஈழத்துப் பூதந்தேவனாருக்கு அடுத்து ஆரியச் சக்கரவர்த்திகளை வைத்துப் பார்க்கின்ற நிலையில், ‘ஆரியச் சக்கரவர்த்திகள்’ என்கின்ற தனித்த பகுப்பினைச் செய்ததன் வாயிலாக ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் பற்றிய வரலாற்று உணர்வு கொண்டவராகக் கணேசையர் காணப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தின் பெயர்க்காரணம், ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணத்தைத் தலை நகரமாகக் கொண்டு அரசாண்டமை, அவர்களது பணிகள், ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் சிலப்பதிகாரக் கூறுகளும், கண்ணகி வழிபாடும் பெற்றிருந்த முக்கியத்துவம் என்பவற்றையும் இந்நூல் குறிப்பிடுகின்றது. அடியார்க்கு நல்லார் என்னும் புலவரொருவர் சிங்கையாரிய நகருக்கு வந்து கல்வியை விருத்திசெய்ததாகவும், இவரும் சிலப்பதிகாரத்துக்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லாரும் ஒருவரே என்பதில் உடன்பாடுகளும் கருத்துவேறுபாடுகளும் காணப்படுகின்றன எனவும், சிலப்பதிகாரக் கதை மரபுகள் அடியார்க்கு நல்லார் என்கின்ற பண்டிதமணி இலங்கையில் வாழ்ந்தார் எனக் குறிப்பிடப்படுகின்ற காலத்திலேயே ஈழத்தில் பெரும் செல்வாக்குப் பெற்றதனால் சிலப்பதிகாரத்துக்கு உரையெழுதியவரும் இங்கு குறிப்பிடப்படும் அடியார்க்கு நல்லாரும் ஒருவராக இருக்கலாம் எனவும் சுட்டிக்காட்டியிருப்பார். அது வருமாறு:

> “இப்பண்டிதமணியே சிலப்பதிகாரத்துக்கு உரை செய்த அடியார்க்கு நல்லார் என்பர் சிலர். அது பொருந்துமோ என ஆராயத்தக்கது. இக் குணபூசண சிங்கையாரியன் மகன் விரோதயசிங்கையாரியன் காலத்திலேயே கண்ணகி கோயில்கள் யாழ்ப்பாணத்தில் உண்டாயின என சரிதம் கூறலின், ஒருகால் அவன் காலத்து இப்பண்டிதமணி இருந்து உரைசெய்திருக்கலாம் என்பது ஊகிக்கத்தக்கது. விரோதயனுக்கு பின்னுள்ள ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலே சிலப்பதிகாரம் என்னும் நூல் இங்கே பெரிதும் வழங்கியுள்ளது என்பதற்கு பல சான்றுகள் உளவாதலின் ஒருபோது சிலப்பதிகார உரையை இவ்வடியார்க்கு நல்லாரே செய்திருக்கலாம்” (கணேசையர், 1939: 7) என்பார்.

ஆரியச் சக்கரவர்த்திகள் மரபைச் சேர்ந்த புலவர்களாக பரராஜசேகரன், சேகராஜசேகரன், அரசகேசரி ஆகியோர் காணப்பட்டதையும் அவர்களது இலக்கிய முயற்சிகளாகிய பராராஜசேகரம், சேகராசசேகர மாலை, இரகுவம்சம் ஆகியவற்றையும் ஆசிரியர்

குறிப்பிட்டிருப்பார். அரகேசரியின் இரகுவம்சத்தின் மொழிபெயர்ப்புச் சாதுரியத்தையும், அந்நூலில் காணப்படுகின்ற சிலப்பதிகாரம், கம்பராமாயணம் உள்ளிட்ட தமிழ் இலக்கியங்களின் செல்வாக்கையும் உதாரணங்களுடன் எடுத்துரைத்திருப்பார். ஆசிரியரது இப்பண்பு தமிழிலக்கிய விமர்சனம் தொடர்பான அவரது சிந்தனையின் வெளிப்பாடேயாகும்.

பண்டித ராசர், கவிராஜர் முதலான பலர் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தைச் சேர்ந்த அரசரல்லாத புலவர் எனவும் இவர்கள் முறையே தக்சண கைலாசமாலை, கோணேசர் கல்வெட்டை இயற்றினார்கள் எனவும், இந்நூல்களைப் புலோலி பொ.வைத்தியலிங்கதேசிகர் பதிப்பித்தார் எனவும், தக்சண கைலாய மாலை கோணேச புராணம் எனவும் அழைக்கப்பட்டிருக்கின்றது எனவும் அவரது நூல் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. வரதபண்டிதரால் பிள்ளையார் கதை, சிவராத்திரிபுராணம், ஏகாதசி புராணம், அமுதாகரம், கிள்ளைவிடு தூது (கண்ணியவளை குருநாதர் சுவாமி கிள்ளை விடு தூது) முதலியவை இயற்றப்பட்டன என்பதையும் அவற்றின் உள்ளடக்கச் செய்திகளையும் ஆசிரியர் குறிப்பிடுவார்.

சி.கணேசையர் குறிப்பிடுகின்ற ஒல்லாந்தர் கால முக்கியமான ஈழநாட்டுப் புலவர்களாக சின்னத்தம்பிப் புலவர், மயில்வாகனப்புலவர், இணுவைசின்னத்தம்பிப் புலவர், சேனாதிராஜ முதலியார், சரவணமுத்துப்புலவர் முதலானோரையும் அவர்களது இலக்கியங்களான முறையே மறசையந்தாதி, கல்வளையந்தாதி, கரவை வேலன் கோவை, பறாளைப்பள்ளு, புலியூர் யமக அந்தாதி, யாழ்ப்பாண வைபவமாலை, ஞானலங்கார நாடகம் , காசியாத்திரை விளக்கம். இணுவைச் சிவகாமியம்மை பதிகம், பஞ்சவன்னத்தூது, நல்லையந்தாதி, நல்லை வெண்பா, நல்லைக் குறவஞ்சி, நீராவிப்பிள்ளையார் கலிவெண்பா, வேதாந்த சுயஞ்சோதி, ஆத்துமபோதப்பிரகாசிகை முதனானவற்றைப் பட்டியற்படுத்த முடியும். அவற்றுள் இன்று கிடைக்காத பல நூல்களின் பெயர்களும், கணேசையரின் காலத்திலேயே கிடைக்காத பல நூல்களின் பெயர்களும் இடம்பெறுகின்றன.

ஈழத்து இலக்கிய வரலாற்றை இலக்கியங்கள், இலக்கணங்கள், நாடகங்கள், உரை நூல்கள், பதிப்புக்கள், அகராதிப்பணிகள், பத்திரிகைகள் முதலான பல் பரிணாமங்களின் அடிப்படையில் விளக்குகின்ற போக்கினை ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரத்தில் காணமுடிகின்றது. சுவாமிநாதரால் இராமநாடகம், தருமபுத்திர நாடகம் என்பன படைக்கப்பட்டதனையும் இராமசாமி ஐயரால் அல்லி சரித்திரம் நாடகமாகப் படைக்கப்பட்டிருப்பதையும், விலாசம் பாடியவர்களாக பிரான்சிஸ் பிள்ளை, இராமலிங்கப்பிள்ளை முதலானோரைக் குறிப்பிட்டிருப்பார். இலங்கையிலிருந்து வெளிவந்த பத்திரிகைகளான உதய தாரகை, உதயபானு, இலங்கை நேசன், விஞ்ஞான வர்த்தனி ஆகியவை பற்றியும் அப்பத்திரிகைகளில் எழுதிய முக்கியமான ஆசிரியர்கள் பற்றியும் அறியக் கூடியதாக உள்ளது. கிறிஸ்தவ சமயம் சார்பான இலக்கியங்களைப் படைத்தவர்களாக தொன்பிலிப்பு, பூலோகசிங்க முதலியார், பிரான்சிஸ் பிள்ளை ஆகியோரையும் அவர்களது ஞானானந்த புராணம், திருச்செல்வர் காவியம் உள்ளிட்ட இலக்கியங்களையும் குறிப்பிட்டிருப்பார்.

இலக்கியங்களை அறிமுகப்படுத்தும் போது, பெரும்பாலும் அவற்றின் உள்ளடக்கம், எடுத்துக்காட்டான சில பாடல்கள், அவை யார் மீது பாடப்பட்டது, பாடியவர், பதிப்பித்தவர், உரையாசிரியர் முதலான தகவல்களைச் சேர்த்து தருகின்ற பண்பினை ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதத்தில் காணலாம். புலவர்கள் வாழ்ந்த காலப்பகுதிகளில் நிலவிய இலக்கியப் போக்கு, இலக்கிய இயக்கங்கள், இலக்கிய சர்ச்சைகள் என்பவற்றையும் குறிப்பிட்டிருப்பார். எடுத்துக்காட்டாக,

> “இவராற் (முத்துக்குமார கவிராசர்) செய்யுள் வடிவாகச் செய்யப்பட்ட நூல்களும் பலவுள. அவற்றுள் யேசுமதபரிகாரம், ஞானக்கும்மி என்னுமிரண்டுமச்சிடப்பட்டுள்ளன. இவற்றுள் ஞானக்கும்மியைக் கண்டித்து அஞ்ஞானக் கும்மியெனவொன்றை பிற்காலக் கிறிஸ்தவரொருவரியற்றி வெளியிட்டனர். அதைக்கண்டித்து சிலம்பு நாதப்பிள்ளை யென்பவர் அஞ்ஞானக் கும்மி மறுப்பு என ஒரு நூலியற்றி வெளியிட்டனர்” (மேலது :77).

என்பதைக் குறிப்பிடலாம். இங்கு ஈழத்தில் அக்காலத்தில் நிலவிய சைவ - கிறிஸ்தவக் கண்டன மரபில் தொடர்ச்சியாக நிகழ்ந்த சில அம்சங்களைச் சுட்டிக்காட்டியிருப்பதைக் காணலாம்.

சி.கணேசையரைத் தொடர்ந்து தென்புலோலி மு.கணபதிப்பிள்ளையின் ஈழநாட்டின் தமிழ்ச்சுடர்மணிகள் என்னும் நூலும், சு. வித்தியானந்தன், ஆ. வேலுப்பிள்ளை ஆகியோரின் பன்முகப்பட்ட நோக்கிலான புலவர் சரித்திரங்களும், சி. கணேசையரால் எழுதப்பட்ட சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் வரலாறு, முத்துக் குமாரசுவாமிப்பிள்ளையால் எழுதப்பட்ட குமாரசுவாமிப்புலவர் வரலாறு (1970), வைத்திலிங்கத்தின் சேர். பொன் இராமநாதனின் வரலாறு(1971), கனக செந்திநாதனின் கவின் கலைக்கு ஒரு கலாகேசரி (1974) முதலான தனித்தனிப் புலவர்களின் விரிவான வாழ்க்கை வரலாற்று நூல்களும் வெளிவந்திருக்கின்றன, இன்றும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ''தனிநபர்கள் சார்ந்து உருவாக்கப்படும் மணி விழா மற்றும் வைர விழா சார்ந்தோ அன்றி அவர்கள் நினைவாக கொண்டாடப்படும் நூற்றாண்டு விழா சார்ந்தோ வெளியிடப்படும் சிறப்பு மலர்களினூடாகவோ தனிநபர் வரலாறுகள் எண்ணிறந்த அளவில் ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றன. 1901இல் வெளியிடப்பட்ட விநாசித்தம்பி அவர்களின் 'maniampathiar Santhathimurai' என்ற ஆங்கில நூலானது குடும்ப வரலாறை ஆவணப்படுத்திய பண்பு கொண்டது. இதே போன்று தமிழில் எழுதப்பட்ட குடும்ப வரலாற்று நூலாக காசிநாதனின் 'எமது உற்றார், உறவினர் முறை' (1963) அமைகிறது. சில்லாலை இன்னாசித்தம்பி வைத்திய நிலையத்தால் 1983இல் வெளியிடப்பட்ட காக்கும் கரங்கள் என்ற நூலானது இன்னாசித்தம்பி வைத்திய மரபின் பத்துப் பரம்பரையை இரத்தினச்சுருக்கமாக எடுத்துக்கூறுகிறது'' (ஸ்ரீ காந்தலட்சுமி, 2014). இவ்வாறு புலவர் வரலாறாகவும், தனித்தனிப் புலவர்களின் விரிவான சரித்திரமாகவும் வளர்ந்து பின்னர் எப். எக்ஸ் நடராசா, க.செ. நடராசா முதலானோர்களால் கால வரன்முறைப்படுத்தப்பட்ட வரலாறுகளாக வளர்ச்சியடைந்த ஈழத்து இலக்கிய வரலாறானது இன்று பல்வேறு கோட்பாட்டு பின்புலங்களிலும் ஆய்வு செய்கின்ற ஆய்வுகளாகப் பரிணமித்துள்ளன.

**முடிவுரை**

சி. கணேசையரின் ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம், புலவர் வரலாற்றின் மூலம் இலக்கிய வரலாற்றைக் கட்டமைக்கின்ற ஆய்வுகளுள் மிக முக்கியமான ஒரு முயற்சியாகும். தமிழகப் புலவர் வரலாறுகளோடு சேர்த்து ஆங்காங்கே ஈழத்து புலவர் வரலாறுகளைக் கூறுகின்ற முறையிலிருந்து மாறுபட்டு முற்று முழுதாக ஈழத்து புலவர்களின் வரலாற்றை கூறும் முகமாகத் தனித்து எழுந்த ஒரு ஆய்வு நூலாக ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம் விளங்குகின்றது. அதுகால வரையிருந்த அகரவரிசையில் புலவர் வரலாற்றைக் கூறுகின்ற மரபிலிருந்து மாறிப் பெரும்பாலும் கால அடிப்படையில் புலவர் வரலாற்றைக் கட்டமைக்கின்ற நூலாகவும் திகழ்கின்றது. ஈழத்து இலக்கிய வரலாற்றை சங்க இலக்கியங்களுடனும் ஈழத்துப் பூதந்தேவனாருடனும் ஆரம்பித்திருப்பதுடன், ஈழத்துப் பூதந்தேவனார், ஆரியச் சக்கரவர்த்திகள், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்கின்ற அடிப்படையில் வரலாற்றுக் காலத்தை வகுக்கின்ற கால உணர்வு கொண்டவராகவும் சி. கணேசையர் விளங்கியுள்ளார். வெறுமனே புலவர்களின் வாழ்க்கை வரலாறுகளை ஒப்பிக்கின்ற மரபிலிருந்து மாறுபட்டு அவர்களுடைய இலக்கியப் பணிகளையும் அவை தொடர்பான ஆசியரது விமர்சனங்களையும் கருத்துக்களையும் தமிழ்ப்புலவர் சரிதத்தில் காணக் கூடியதாகவுள்ளது. காலம், இடம் என்கின்ற இரண்டுமே ஆய்வினுடைய போக்கினைத் தீர்மானிக்கும் என்ற வகையில் சி.கணேசையர் வாழ்ந்த காலச் சூழமைவையொட்டியெழுந்த அவரது புலவர் வரிசை நூல் ஈழத்து இலக்கிய வரலாற்றைக் கட்டமைப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றது.

**உசாத்துணைகள்**


ஆர்னலட் சதாசிவம் பிள்ளை, (1994), **பாவலர் சரித்திர தீபகம்**, மூன்றாம் பதிப்பு, புது டெல்லி; ஏசியன் எடியுகேசனல் சர்விசஸ்.

அருணாசலம். க, (1997), **இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள்**, கொழும்பு; குமரன் புத்தக இல்லம்.

இரகுபரன். க, (ப.ஆ) (2006), **ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்**, கொழும்பு; இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களம்.

றிச்சார்ட் .ஜே. இவன்ஸ், (2011), "சமூக வரலாறும் வரலாற்றில் தனிநபர் வகிபாகமும்", **பிரவாதம்**, இதழ் 5, கொழும்பு; சமூக விஞ்ஞானிகள் சங்கம்.

சிவத்தம்பி. கா, (2000), **தமிழில் இலக்கிய வரலாறு, சென்னை**; நியூ செஞ்சுரி புக் கவுஸ்.

சிவலிங்கராஜா.எஸ், (1989), **வித்துவசிரோமணி கணேசையரின் வாழ்க்கையும் பணியும்**, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சைமன் காசிச் செட்டி, (1859), **தமிழ் புளுட்டாக்**, யாழ்ப்பாணம்.

பொன்னையா. நா, (ப.ஆ), (1939), **ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்**, ஈழகேசரி.

மகேஸ்வரன்.வ,(2015), **தமிழிலக்கிய வரலாற்று எழுதுமுறையில் ஈழத்தவரின் பங்களிப்பு,** மையக் கருத்துரை, தஞ்சாவூர்; தமிழ்ப்பல்கலைக்கழகம்.

வேலுப்பிள்ளை, ஆ, (2009), ஈ**ழத்துப் பழைய இலக்கியங்கள் வரலாற்றுத் தேடல்**, கொழும்பு; குமரன் புத்தக இல்லம்.

ஸ்ரீகாந்தலட்சுமி, (2014), **ஈழத்துத் தமிழ் சமூகமும் ஆவணவாக்கமும்**, கருத்தூண், www. karuththuun.com.